முருகப்பெருமான் துணை

# மகான் திருநாவுக்கரசர் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.10.2023, வெள்ளிக்கிழமை

1. தருமத்தின் காவலனே அரங்கா
தயவின் தலைவனே தேசிகா
கருமத்தை போக்கி மீட்டருள
கலியின் ரட்சகனாக வந்த குருவே
2. குருவே ஆறுமுக அரங்கனே
குவலயத்தில் உன் பெருமை கூறி
உறுதிபட அறிவுரை ஆசிதனை
உரைத்திடுவேன் சோபகிருது துலைதிங்கள்
3. திங்களிலே தசதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10 ம் நாள், 27.10.2023, வெள்ளிக்கிழமை)
தேசிகன் கேட்க திருநாவுக்கரசநாயனாரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார ஞானி காட்டும் ஞானவழி
4. ஞானவழி உலகை மாற்றும் தருமவழி
நம்பகம் வைத்து மக்கள் வர
ஞானமெனும் மேல்நிலை தனை
ஞானபண்டிதன் ஆசிபட அடைவர்
5. அடையவே அரங்கமகானின்
அற்புதமான அன்னதான சேவை
தடையற தயவை கூட்டும்
தனிப்பெருஞ் சக்தியாக இருக்க
6. இருக்கவே தரணியோர் ஏற்று
எங்கும் அன்னதான கிளைகள்
கருத்தாகத் துவக்கி சேவைதனை
கலியினில் பெருமளவுச் செய்ய

7. செய்யவே தருமபலம் கூடி
செப்பிட எங்கும் வலுவான
மெய்ஞான வான்கள் ஆகவே
மேலான மக்கள்படை உருவாகி

8. உருவாகி உலகை மாற்றும்
உயர் சேவையில் இறங்கி
பெருமைபட ஆன்மீக ஞான
புண்ணியவான்கள் நிறைந்த சபை

9. சபைதனை உருவாக்கி நன்கு
சகலருக்கும் நன்மை காப்பு
அபயமெனத் தரும் ஆளுமையாக
ஆன்மீகம் கலந்த ஞான ஆட்சி

10. ஆட்சிக் காலமாக ஞானத்தலைமை
அமைந்துமே உலக மாற்றம்
மாட்சிமைபட அரங்கனால் நடக்கும்
மண்ணுலகம் இயற்கை ஆசிபட

11. ஆசிபட எல்லா வளமும் கூடி
அறிவிப்பேன் நீர்நிலவளமுடன்
பேசிட இயற்கை பாதுகாப்புடன்
பேதமற எல்லாவகை ஏற்றமும் காண்கும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—